(5) அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு 1979.

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி: தலைவரவர்களே, ''தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி: இச்சட்டமுன் வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) கடன் நிவாரணச் சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி: தலைவரவர்களே, ''தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி: இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(6) வரவு செலவுத்திட்டம் 1979–80 வாக்கெடுப்பு—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 3: மோட்டார் வண்டிகள் சட்டங்கள்-நிர்வாகம்.

(ஆ) கோரிக்கை எண் 39: சாலைகளும் பாலங்களும்.